(இ) கோவை பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (Senate) எட்டாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பெற்ற திருவாளர்கள் மா. சின்னராசு, கே. கல்லன் ஆகியோரது பதவிக்காலம் 20–11–1986 அன்று முடிவடைவதால் 21–11–1986 முதல் அப் பல்கலைக் கழகம் தனது ஆட்சிக் குழுவின் (Senate) 20–11–1989 வரை பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. இரு உறுப்பினர்களைத் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் 17–11–1986 முற்பகல் 11–00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப் பெற வேண்டும்.

(ஈ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு விற்கு (Senate) ஏழாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பெற்ற திருவாளர்கள் பி. முசிறிபுத்தன், ஜே. எஸ். இராசு ஆகியோரது பதவிக்காலம் முடிவடைந்துள்ளதால், அப் பல்கலைக் கழகம் தனது ஆட்சிக் குழுவிற்கு (Senate) மூன்றாண்டுக் காலம் பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. இரு உறுப்பினர்களைத் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் 17–11–1986 முற்பகல் 11–00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப் பெற வேண்டும்.

(உ) காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் அப்பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) எட்டாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. ஒரு உறுப்பினர் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும்.

இதற்கான தீர்மானம் 17–11–1986 முற்பகல் 11–00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப்பட வேண்டும்.